# அறிவிப்பு

**14.10.2025**
**சென்னை.**

மாண்புமிகு தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் ஆணைப்படி மற்றும் தலைவர்/முதன்மை நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு வழிகாட்டுதலின்படி, சென்னை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் எழும்பூர், சைதாப்பேட்டை, ஜார்ஜ் டவுன் ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு தன்னார்வ சட்டப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். மேற்படி தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை புரிய விருப்பமுள்ள சென்னை வருவாய் மாவட்டத்தில் குடியிருக்கும் கீழ்கண்ட பிரிவுகளில் உள்ள தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேற்படி தன்னார்வ சட்டப்பணியாளருக்கான கடமை சேவை மட்டுமே, இது நிரந்தர பணிக்கானது அல்ல. மேலும் இது முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே நாளொன்றுக்கு ரூ-750/- மிகாமல் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. சமூகப் பணியில் முதுநிலைக் கல்வி (M.S.W.) பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி பணியாளர்கள்
5. மருத்துவர்கள் உடல்நல நிபுணர்கள்
6. மாணவர்கள் மற்றும் சட்ட மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராகப் பதிவு செய்யும் வரை)
7. அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
8. மகளிர் குழுக்கள், மைத்ரி சங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடக்கிய சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்
9. மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் உளநிறைவிற்கேற்ப தகுதியுடைய சேவை மனப்பான்மை உள்ள ஏனைய நபர்கள்.

மேற்கூறிய வகைகளின் கீழ் வருபவர்களில் பொதுமக்களுக்கு சேவை செய்ய ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை வருகின்ற **31.10.2025 மாலை 5.00** மணிக்குள் நேரிலோ அல்லது பதிவு தபால் வழியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். தபால் தாமதம் ஏற்கப்படமாட்டது.

- விண்ணப்பத்தினை சென்னை மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

**https://chennai.dcourts.gov.in/**

- நேர்காணல் தேதி, இடம் மற்றும் இதர விபரங்களை விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்டுள்ள சென்னை மாவட்ட நீதிமன்றத்தின் இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு தபால், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக எந்தவொரு தகவலும் தெரிவிக்கப்பட மாட்டாது.

**விண்ணப்பங்கள் வருகின்ற 31.10.2025 மாலை 5.00 மணிக்குள் வந்து சேர வேண்டிய முகவரி:**

தலைவர்/முதன்மை நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
வடக்கு கோட்டை சாலை
ADR கட்டிடம், சென்னை – 600 104.

**Sd/-S.P.Kavitha,**
**Secretary/Sr. Civil Judge,**
**District Legal Services Authority,**
**Chennai.**

**Sd/- S.Karthikeyan,**
**Chairman/ Principal Judge,**
**District Legal Services Authority,**
**Chennai.**

| விண்ணப்பதாரர் புகைப்படம் சுய சான்றொப்பம் இடவும் |
|---|

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை

## தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கான விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார்ஃகணவர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4 | பாலினம் | : | |
| 5 | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி | : | |
| 6 | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | |
| 7 | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 8 | இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா?<br>ஆம் எனில் அதன் விவரம்<br><br>(வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 9 | தன்னார்வ சட்டப்பணியாளராக சேவைஃபணி புரிய விருப்பமுள்ள இடம் | : | சென்னை /எழும்பர் / சைதாப்பேட்டை / ஜார்ஜ் டவுன் |

தன்னார்வ சட்டப்பணியாளருக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, இந்த பணி முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த கௌரவ ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்